உ

சிவமயம்



யாழ் நல்லூரைப் பிறப்பிடமாகவும்

இலண்டனை வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் திருமதி தங்கபூபதி செல்லத்துரை அவர்கள்

இறைபதம் எய்தியமை குறித்த

# நினைவு மலர்

08.04.2017

In Loving Memory of

# Late Mrs Thangapoopathy Sellathurai

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

இப்பூவுலகில் எம் நலத்திற்கும்,
வளர்ச்சிக்கும் மெழுகுவர்த்தியாகி
உருகி ஒளியூட்டி, ஆல மரமாகஎம் குடும்பத்திற்கு
நிழல் பரப்பி எம்மையெல்லாம் அன்போடும்
பண்போடும் பாசத்தோடும் வளர்த்து
நல்வழிகாட்டி, நற்கல்வியூட்டி,
உறுதுணையாக இருந்து
சொந்தபந்தங்கள் அனைவருக்கும்
பக்கபலமாய் இருந்துசீரும் சிறப்புடன் வாழவைத்து,
மனிதருள் மாணிக்கமாய், குடும்பத்தின் தலைவியாய்,
தாயாய்மனம் பலமாண்புடன் பரப்பி
இனமெல்லாம் இன்புடன் வாழ ஏற்ற நற்பணிகள்
காத்துவையத்துள் என்றும்
நீங்கா ஒளியாகத் திகழும்
அன்புத் தெய்வத்தின் பாதக் கமலங்களிற்கு
இவ்வினியமலரினைக்
காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி
என்றும் நீங்காநினைவுகளுடன்

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அமரர் திருமதி தங்கபூபதி செல்லத்துரை



அன்னை மடியில்

16 * 03 * 1933

ஆண்டவன் அடியில்

08 * 03 * 2017

## திதி வெண்பா

ஆண்டு துர்முகி அமைந்த மாசித்திங்கள்
பூண்ட பூர்வபக்க துவாதசியில் - மாண்பு
செல்லத்துரை பத்தினியார் தங்கபூபதி அம்மையார்
தொல்லுலகு நீத்தார் காண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

வானுலகும் மண்ணுலகும் வாழ மறைவாழப்
பான்மைதரு செய்ய தமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி அஞ்சலிசெய் கிற்பாம்

தேவாரம்

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடி
காடுடைய சுடலைப்பொடி பூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையயமல ரான் முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச்சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம்
பக்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவன்
நிலவி லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முக்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முக்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசற் திறிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# விநாயகர் அகவல்



சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பல்லிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வண்ண மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
ஐந்து கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் னுளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கு முபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிக ளொடுங்குங் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச் நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழிமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பி னாவினை லுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்த னியக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயத்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்
இருள்வெளி யிரண்டிக் கொன்றிட மென்ன
அருள்தரு மானந்தத் தழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்த மளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்னே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமு நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

தொல்லையிரும் பிறவிசூழும் தளை நீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க

ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க

கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தைஅடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி

நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி

சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்

பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற

மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி

மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்

ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாய் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையார் விண்ணோர்கள் ஏத்த

மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி

மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்

நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீழ்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் சிந்த அடியேர்க்கு
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேசஅருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே

இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே

ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே

காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றினி வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்

தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிரவில் நட்டம் பயின்றாடும் நாதனே

தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்

செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிய
## திருநீற்றுப்பதிகம்

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திலுவாலவாயான் திருநீறே

வேதத்தில் உள்ளது நீறு வெந்தயர் தீர்ப்பது நீறு
போதந்தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத்தருவது நீறு உண்மையில் உள்ளது நீறு
சீதப்புனல் வயல் சூழ்ந்த திருவாலவாயான் திருநீறே

முத்தி தருவது நீறு முனிவரணிவது நீறு
சத்தியமாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீ பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருவாலவாயான் திருநீறே

பூசவினியது நீறு புண்ணியமாவது நீறு
பேசவினியது நீறு பெருந்தவத்தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தமதாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவாலவாயான் திருநீறே

அருத்த மதாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வானமளிப்பது நீறு
பொருத்தமதாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவாலவாயான் திருநீறே

எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப்படுவது நீறு பாக்கியமாவது நீறு
துயிலைத்ததடுப்பது நீறு சுத்தமதாவது நீறு
அயிலைப்பொலிதரு சூலத் திருவாலவாயான் திருநீறே

இராவணன் மேலத நீறு எண்ணத்தகுவது நீறு
பராவணமாவது நீறு பாவமறுப்பது நீறு
தராவணமாவது நீறு தத்துவமாவது நீறு
அராவணங்குந்திருமேனி யாலவாயான் திருநீறே

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மாலொடயனறியாத வண்ணமு முள்ளது நீ:
மேலுறைத் தேவர்கடங்கண் மெய்யது வெண்பொடி நீறு
ஏலவுடம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவது நீறு
ஆலமதுண்ட மிடற்றெம் திருவாலவாயான் திருநீறே

குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமும் கூட
கண்டிகைப் பிப்பது நீறு கருதவினியது நீறு
எண்டிகைப்பட்ட பொருளார் ஏத்தும் தகையது நீறு
அண்டத்தவர் பணிந்தேத்தும் ஆலவாயான் திருநீறே

ஆற்றலடல் விடையேறும் ஆலவாயான் திருநீற்றை
பொற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்
தேற்றித் தென்னனுடற்ற தீப்பிணியாயின தீர
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே

## அபிராமியம்மைப்பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றா இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்ப மில்லாத வாழ்வும்
துய்ய நின்பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாது அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாதி
அருள்வாயி அபிராமியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வும், வரலாறும்

இந்து மகா சமுத்திரத்தில் முத்தென விளங்கும் ஈழநாட்டின் தலையெனத் திகழும் யாழ்ப்பாண மண்ணில், நல்லூர் கிராமத்தில் அரியரட்ணம் செல்லம்மா தம்பதிகளின் மூத்த புதல்வியாக அமரர் தங்கபூபதி செல்லத்துரை அவர்கள் அவதரித்தார். இவருக்கு இளையவர்களாக சீவரத்தினம், அமரர்கள் இரத்தினபூபதி, காந்தபூபதி மற்றும் சத்தியமூர்த்தி அவர்களும் உதித்தனர்.

தகப்பனார் வேலை நிமித்தம் காரணமாக தென்னிலங்கை சென்ற போது, அமரர் சிலகாலம் குடும்பத்தினருடன் பலாங்கொடை நகரில் வசித்தார். பின்னர் 1953ம் ஆண்டு, அமரர் செல்லத்துரையை மணமுடித்து இல்வாழ்க்கையில் நுழைந்தார். நல்லூர் கந்தனின் ஆசியுடன் பலரும் புகழ பல்வகை சிறப்புடன் வாழ்க்கையை இனிதாக நடத்தி மக்கள் செல்வங்களாக மாண்புறு பிள்ளைகளாய் புவனேஸ்வரன், ராஜமோகன், இரத்தினராணி, ராஜயோகன் ஆகியோரை பெற்று பெரும் பேறும் அடைந்தார்.

மூத்தபுதல்வன் புவனேஸ்வரன் ஜேர்மனியில் பதவி பெற்று கமலேஸ்வரி என்னும் நன்மங்கையை மணந்து சத்தியராமை அருந்தவப்புதல்வனாகப் பெற்றார். இரண்டாமவர் ராஜமோகன் சாம்பியாவில் பொறியியலாளராக கடமையாற்றி அருநங்கை Ngeniwe யை கைப்பிடித்து மக்கள் செல்வங்களாக செல்வன், தங்கா, ரட்னா மற்றும் Rex யை பெற்று பெரு வாழ்வு அடைந்தனர். விஞ்ஞானப் பட்டதாரியான இரத்தினராணி பொறியியலாளராம் அமரர் சபாநாதனை கணவனாய் அடைந்து பிரணவன், திவ்வியா வை பிள்ளைகளாக பெற்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய மகன் ராஜயோகன் லண்டனில் பல் மருத்துவராக கடமையேற்று மாதரசி அனுசியாவை இல்லாள்ளாக அடைந்து செல்வி, ஆரணி மற்றும் அஸ்வினியை மக்கள் செல்வங்களாக பெற்றனர்.

அமரர் தங்கபூபதியின் வாழ்க்கை எல்லோருக்கும் ஒரு எடுத்துக்காட்டாக அமைந்தது. அவரது இனிய குணங்கள், வற்றாத புன்சிரிப்பு, கடின உழைப்பு, யாருக்கும் பாரமாக இருக்க கூடாது என்ற மனப்பான்மை எல்லோரையும் கவர்ந்தது. இறை பக்தி மிக்க அமரர் தங்கபூபதி அனைவருடனும் அன்பாக பழகி இணைந்து வாழ்ந்தார். பிள்ளைகளையும் அவரது நண்பர்களையும் சரியான முறையில் வழி நடத்தினார். இதற்கு எல்லாம் மணி மகுடம் வைத்தாற்போல் எல்லோர்க்கும் எப்போதும் உதவி செய்யும் அவரது மனப்பாங்கு அவருக்கு எல்லோர் மனதிலும் நீங்காத இடத்தை பெற்று தந்தது.

இவரது பிரிவு எல்லோரையும் துன்பத்தில் ஆழ்த்தி துயருள் வைத்தது. ஆற்றமுடியாத பிரிவு அவர் தம் இறுதி சடங்குகளில் கலந்து கொண்ட மக்கள் வெள்ளம் அவரின் அருங்குணங் களுக்கு அரிய சாட்சி.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையட்டும். மறு பிறப்பின்றி இறைவனடி சேரட்டும்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகள் அஞ்சலி

அன்பின் அம்மாவுக்கு!

உங்களையும் ஐயாவையும் நல்ல தாய் தந்தையாக பெற நாங்கள் பெரும் பாக்கியம் செய்தவர்களாக இருக்க வேண்டும். சிறு வயதில் நீங்கள் தந்த அன்பும் அரவணைப்பும் பாதுகாப்பும் உறுதுணையும்தான் எங்களுக்கு ஒரு நல்வாழ்வை தந்தது மட்டும் அல்லாமல், வாழ்வின் பல்வேறு சந்தர்ப்பங்களில் எதிர்கொள்ளும் சவால்களை சந்திக்கக்கூடிய உறுதி உள்ளவர்களாக எங்களை உருவாக்கியுள்ளது.

நீங்கள் இருவரும் எங்களை விட்டு பிரிந்தாலும் நீங்கள் தெய்வமாக இருந்து எங்களையும் எங்கள் பிள்ளைகளையும் வழிநடத்துவீர்கள். எங்களுக்கு வரவிருக்கும் சவால்களுக்கு எதிராக போராட வழி அமைத்து காப்பாற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு.

நீங்கள் எங்களை உடலினால் பிரிந்தாலும் என்றென்றும் உள்ளத்தால் எங்களுடன் இருப்பீர்கள்.

அன்புடன்
பிள்ளைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமகள்மார் அஞ்சலி

அம்மா என்றே அழைத்தறிவோம். எம்மை மட்டுமன்றி எமது நண்பிகளையும் அன்பு காட்டி வழி நடத்தினீர்கள்.

அன்பும் பண்பும் அறுசுவை மிக்க சமையல் திறனும் கடுமையான உழைப்பும் அசையா மனவுறுதியும் பார்த்து வியந்ததுண்டு.

எம் பிள்ளைகளை வளர்த்தெடுக்க பெரும் உதவி செய்தீர்கள்.

நன்றிகள் பலகோடி கூறி உங்கள் ஆத்ம சாந்தி வேண்டி நிற்கிறோம்.

அன்பு

மருமகள்மார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்ப்பு மக்கள் அஞ்சலி

மனோ, மகிழன் ஆகிய நாங்கள் எங்களது பெற்றோர்களை 14, 11 வயதில் இழந்து விட்டோம். எம்மை தமது பிள்ளைகளாக எடுத்து பாலூட்டி பசி அகற்றி கல்வி என்னும் நல்ல பயிரை எம்முள் வளர்த்து ஆளாக்கிய தெய்வங்களை இழந்து தவிக்கின்றோம்.

மறு அன்னையாய் உறவு தந்து பேரப் பிள்ளையாய் எமை அணைத்த பேரன்பு தாயே!!

பெருங்கடலாம் உங்கள் அன்பும் வற்றாத ஆசிகளும் வரும் துணையாய் எம்மோடு அந்தம் வரை. எங்கள் கண்ணீரால் உங்கள் பாதங்களை கழுவி உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிராத்திக்குறோம் .

தன் துணையின் கருத்து அறிந்து எமக்கு நற்காவலனாய் நல்வழி காட்டியாய் எம் நலம் பேணி எமக்கு நற் சகோதர்களையும் நல்கி மறைந்த நற் தாயின் ஆத்மா சாந்தியடைய மனமார்ந்த நன்றியுடன் நல்லூர் கந்தனை பிரார்த்திக்குறோம்.

அன்பு நிறைந்த பிள்ளைகள்

மனோ, மகிழன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

My Dear Pattie

Unfortunately, I could not spend much time with pattie, but the few moments I had with her, I met a woman with principles. I have only few memories of pattie's time in Germany and all of them are characterized by her nature. For instance, I remember her getting up early in the morning, dressing up in her pearl white saree and then going to our vegetable garden to pickup fresh vegetables for our daily meal. Especially Fridays she enjoyed cooking lunch for us with varieties of curries.

She took care of the family, travelling around the world to share her time with us. She was there when she was needed and is still with us.

With love

**Sathiyaraam**

Grandson


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் கொடியில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூத்த மலர்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## APPAMMA

Appamma was a wonderful woman who took care of us when we were sick. Appamma was a loving and caring grandmother. She brought so much joy to our family. I will never forget the memories I shared with her in Zambia and Srilanka. She was always concerned about our studies and always made sure we studied before going to bed. We will miss you so much Appamma.

I wish you could be here by my side. Appamma used to wake us up in the morning to go to school and always made two cups of coffee for mum and dad. Appamma was always concerned about Rex's diet, so she made sure to cut fruits for us after each meal we had. She taught me how to knit and sew. She also combed my hair and oiled it for me whenever I forgot to oil it.

She cooked for my dad every day. She also helped my mother with gardening. Appamma also taught me to prepare curries. Appamma was one of a kind, she was more than a grandmother to me, she was my best friend. She helped me to become a better person. I believe that one day I'll see her again in the kingdom of God.

May Your Soul Rest In Peace.

Love you always

**Thanga Rajamohan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## APPAMMA

I love and I will miss you so much. You were the best grandmother to us, but for me you were my hero, my mother and my best friend. I miss the way you used to kiss us and give us hugs. You told us that you are a very strong woman. You were my hero Appamma. We are sorry for all the wrong things we did to you. I wish you were still here because we miss you. You managed to take care of four loving children. You were caring, loving, truthful, and faithful and would share the little you had with us. I am sorry for not being there for you when you were sick. I wish I was there to look after you and see you for the last time. May God bless you and may your very special soul rest in peace. I know you believed in me and my family. You believed we could achieve a lot in life if we worked hard and studied. You believed life was full of many amazing wonders. I have become a hard working student because of you. My family is doing well and Appamma's last wish was for all of us to do well in life. I still remember the song you sang to us when we were younger. Appamma may the almighty God bless you when you go into his kingdom and again may your special soul rest in caring and loving peace and I will always pray for you.

Love you always

**Ratna Rajamohan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## My Dear Ammamma!

Ammamma was the perfect combination of beliefs, character and love, surely designed by the most eccentric god that she believed in. She's been living with us since I was two years old and she helped my mum to raise both me and Anna, which included everything from feeding us to shouting at us to teaching us *thevarums*. I'm only just realising that so many others share the impact she had on me. She lived a long life and gave so much of herself to those she cared about. She's left her legacy in not only to her children and her grandchildren, but in every person that loved her – that found a mother in her.

Perhaps I have a biased viewpoint, but I'm sure Amma was Ammamma's favourite. She'd go out of her way to make Amma's life the easiest that it could be; she'd rush to help bring the groceries inside after Amma does the weekly shopping, she'd happily wash the giant pile of dishes that would magically appear by the sink, she'd shout at me and Anna when we were making things difficult for Amma. She'd shout at us, ranting about how amazing Amma is and how hard she works, and the pride that Ammamma felt towards Amma was tangible in these moments. I think that she worried about Amma too; you haven't seen stress until you've seen Ammamma pacing around the house because Amma's late home. She worried about her because she loved her so much and she wanted life to be perfect for her; she would have done anything to make Amma happy. Amma, in turn, made Ammamma as happy as she could. Chinna mama, however, was Ammamma's baby, and she'd go to bed hoping that she'd be woken up in a few hours by the ringing of the


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

doorbell. Whatever time he came to visit her, she'd come down to spend time with him, and the image of Ammamma making her way down the stairs as fast as she could – which admittedly wasn't very fast – is one I treasure, as is the image of her smiling as Amma and Chinna Mama teased her about one thing or another.

There are so many memories that I could talk about, so many things that I didn't realise I would miss. I'll indulge in just one more. Ammamma's days started at 3a.m., which is unfortunately around the time that I go to bed. As soon as I'd hear the click of her light switch, I'd try to sneak into the bathroom and brush my teeth before she showered, but I usually wasn't fast enough and we'd cross paths. I'd ask her sweetly and watch her head wobble as she nodded and said, "Okay," then I'd slip into the bathroom, ending my day as hers began. She'd wake up this early in order watch the *kovil* on TV, cuddled under layers of blankets and sat beside the mini-heater as the sun rose to greet her.

Ammamma is now in the brightest of places, bathing in sunshine and warmth, with the gods that she was so devoted to, with the family and friends that she lost, and with her husband about whom nobody seems to be able to utter a bad word. Ammamma was part of us – part of our little household – and she will be missed, but we will take comfort in the peace that we know she has found.

**Granddaughter**
**Thivija**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## My beloved Appamma

I have been extremely lucky to live near Appamma for my whole life. We visited her all the time at Rani Mami's house and I loved spending time with her. Sometimes she would even stay at our house for a few weeks. Whenever she stayed with us, she would do whatever she could to help. I will always remember her as a strong, loving and wise grandmother.

The thing that I loved about her the most is how she would never stop doing work. She would sit next to the TV in our house and cut vegetables for hours. She always wanted to be doing something. When she finished cutting all the vegetables, she would try to clean the house. When she finished cleaning the house, she would make us some food.

She hated doing nothing. She would also tell us three to always do our work. She would complain if we just sat around and did nothing. I think that she thought that we should always use our time wisely by doing something important. She did not believe in wasting time.

I know that she is resting in heaven right now and I know that she is happy. I love you and I will miss you.

Granddaughter

**Selve**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## My Appamma

My appamma was a humble lady who brought happiness wherever she went. As a vegetarian, she always made us eat all our food-especially if it was meat. Appamma always reminded us about all those children who didn't have food every time I argued about eating mine. She was always more than grateful with what she had; a lesson which quite a lot of us should learn from.

I remember when I was young and Appamma would patiently sit on our sofa and insist on helping amma with the chores. Her heart was filled with benevolence and she only used it for others. She raised four beautiful children who are now polite, well-mannered and respectful adults.

Granddaughter

**Aaranie**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## My Appamma

My Appamma was the tidiest person I ever knew. Her hair was always tied into a bun without one hair out of place, and her sari was always neatly worn. She was very religious too, I only saw her wearing white unless it was a special occasion like my akka's sari party. But it was her kindness and benevolence that attracted everyone.

She always put others over herself and looked after everyone. She tried to make everyone else's lives easier and make it harder for herself and always told me to listen to my parents and be kind to them. She never had a favourite but as my Appa was her youngest child she spent a lot of time looking after him. She was very patient and calm, I've never heard her ever raise her voice.

She also never wasted food. She got me slightly annoyed when I was younger and she made me finish every bit of my food, but now I am thankful for it. I am thankful for everything she did for me.

Granddaughter,
**Ashvinie**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Periyamma

Thank you for giving us this opportunity to share our cherished memories of Periyamma. Although she was 83, in our minds, her image did not change very much within the past 50 years – particularly, the way she wore the signature style of her sari predominantly in very light colours along with her very neatly combed hair, gentle walk and voice.

As far as our memories go, Yogan Anna pretty much enjoyed the additional attention of being the youngest in the family. Even after completing his A levels, we believe that he was always very close to his mother and they were often seen together. She loved and cared for all of us with her own motherly affection and nurturing. Her children had many friends who often hung around and studied in Periyamma's home. She really excelled in her hospitality, love and individualized care and attention.

Periyappa had a very prestigious and reputable post as the Registrar of the province's one and only Technical College. Nevertheless, neither he nor she showed any of those power or privilege attitudes in their day-to-day lives or in the community. Both of them were known for their simplicity, calm, quiet but very firm and strong life-style and convictions. Often people admired and wondered about the way that Periyamma and Periyappa communicated and ran their family of four children. Periyamma would ask to buy some items. Without a second's delay, Periyappa would take the bicycle and leave. After he returned, Periyamma would ask for something else, again. Without an argument or a complaint or any disappointment, Periyappa would return. None of us had


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ever seen them using their voices against each other. Nor did they say "you know" in disciplining their children.

One important fun fact that drew people's attention was the noticeable height difference of this beautiful happy couple. From two people of two different heights, they came together and created a good-looking next generation.

As cousins, we had a very close, sincere, loving and caring relationship from very early on. We can sincerely share with all of you that we are always there for each other whenever a need arises.

Appan is grateful to Rani Akka for reading his text books when he needed it. No one else realized or offered to read for him but Rani Akka was a role model in taking care of his unique need at the right time without someone else having to tell her or even ask her to do so.

Kanna Anna from Australia sent the following paragraph to share:

"Losing my mother at childbirth allowed me to have 3 beautiful mothers – Ammamamma, Periyamma and Sinnamma as my guardian angels during my childhood in Nallur. When I was growing up at Periyamma's house along with Rajan annai, Mohan, Rani and Yogan as one of their siblings, I was always taken care of with plenty of love. Loki and I were really lucky to be able to talk to her and have her blessing even after she was admitted to the hospital. She was just as sweet, caring and full of joy as always right up to the end. Thanks Periyamma for all your love, care and support and your words of wisdom; you will live in our hearts forever."

We will all miss the occasions to routinely visit Periyamma's house whenever they had Thosai or Appam. We wish that our


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

children will have the taste, the bonding and the sharing of such a beautiful family. Those memories always pop up in our minds when we think about today's trips to McDonald's or KFC. Unlike those fast-food places, those memories of Thosa and Appam routines are so healthy and full of love and sharing and caring.

Besides mourning, we should look at the positive side which should be celebrated and cherished. All four of her children are truly grown up as shining pillars of family and community. She had ten flourishing grandchildren who are on their way to becoming professionals such as doctors, dentists, engineers and above all are very happy, healthy and contributing members to our community and nation.

Periyamma was very keen not to become a burden to anyone. She pretty much emphasized that wish in a prayer. God granted her wishes including this one. She did her duties so diligently and beautifully and she was ready for the next journey so we are all privileged and grateful to be here to say thank you for all that she has contributed and we pray for her soul to graciously rest in peace.

Thank you to all of you for coming and being with us at this occasion.

By

**Kannan, Appan, Karthiga and Raja**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா அன்பின் இலக்கணம்

அம்மாவின் வெள்ளை உள்ளத்திற்கு என் வெண்பாக்கள் சமர்ப்பணம்;

அம்மாவை யாமிழந்த அன்பின் பிரிவதனால்
எம்மில் தளர்ந்திட்டுத் தானெழுதும் - நம்பாவை
சீராய்ச் சமர்ப்பிக்கச் சீர்மிகு ஏரம்பா
நேராய்த் துணையிரு நீ!

அம்மா பிள்ளையாரை வணங்குபவர். அம்மா இல்லை என்று நினைக்கும் போது வரும் துன்பம் தாங்க முடியாததொன்று; அம்மாவின் அறிவுரையை நினைத்து அதனை அடக்க முயல்கிறேன்;
அம்மாவின் வாழ்வு கொண்டாடப்பட வேண்டிய வாழ்வு; அவரின் கருணை உள்ளமும் தயவும் எல்லோரையும் உபசரிக்கும் பண்பும் போற்றப் பட்டுப் பின்பற்றப்பட வேண்டியவை.

வாழ்வாங்கு வாழ்ந்தின்று வானுறை தெய்வமாய்
ஆழ்துயில் கொள்ளும் அருமையம்மா- வாழ்வினில்
அன்பொன்றே நின்மாட்சி என்றே அறிந்திட்டேன்
இன்பமுடன் நல்லூரில் அன்று!

அம்மாவை முதன் முதலில் எனது நண்பி ராணியின் தாயாராகவே சந்தித்தேன் நல்லூரில்இற்றைக்கு முப்பத்தாறு வருடங்களின் முன்! ஆனால்அம்மா என்று உரிமையுடன் கொண்டாடும் பாசத்தைக் காட்டி
நன்மை, தீமை யாவற்றையும் பரிவுடன் புரிய வைத்து வழி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தியவர் அம்மா! பாசம் காட்டுவதுடன் கண்டிக்கவும் தயங்க மாட்டார். அவரின் நிர்வாகத் திறன் கண்டு நான் பிரமித்த கணங்கள் பல.

பதின்ம வயதினில் பார்த்தேன் பரிவு
வதியுந் தனித்த வனப்பும் மதிமுகமும்
அன்பால் மகளாய் அணைத்திட்டீர் என்னையும்
தன்பிள்ளை என்றுதான் அன்று!

அந்தப் பதின்ம வயதுகளிலிருந்து இன்று வரை அம்மா தனது மகள் போன்று என்னைத் தனது பிள்ளைகளில் ஒருவராகவே பாதுகாத்தார். அவர் சுகயீனமுற்று வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டிருப்பதை அறிந்து கடந்த ஞாயிறு அதிகாலை ஏழுமணி அளவில் என் கணவருடன் அங்கு சென்றேன். அவர்தனது உடல் நலக் குறைவைக் கருதாமல் நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தார்; அண்மித்த காலங்களில் அவருக்கும் எனக்கும் ஆன்மீக சம்பந்தமான உரையாடல்களே அநேகம் நிகழ்ந்தது; அன்றும் அவர் "தங்கச்சி எனக்கு விடுதலை வேணும்" – "அம்மா போனால் அழக் கூடாது – ஓம் நமசிவாய என்று ஓதி வழியனுப்ப வேணும்" என்று நிகழப் போகும் சகலமும் அறிந்தவர் போல் கூறினார். லௌகீக வாழ்வில் இருந்தும் ஓர் பற்றற்ற துறவி போல் எப்படி அம்மாவால் இருக்க முடிந்தது? அது அவவால் மட்டுமே முடியும்.தனது இறுதிக் காலத்தையும் உணர்த்தி அந்த இழப்பைத் தாங்கும் தைரியத்தையும் தந்தார் அம்மா.

அற்றைநா ளிட்டுமே இற்றைவரை பாதுகாத்துப்
பற்றை யறுத்திடும் பாங்கினையும் சற்றே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியவே தைரியமும் புக்குவித்த நேர்த்தி
அரியதே என்றறிந்தேன் இன்று!

அம்மாவின் திருவுருஅன்பும்சாந்தமும் சந்ததமும் குடி கொண்ட திருவுரு. அம்மாவின் கனிவு யாவரையும் ஆட்கொள்ளும் சக்தி கொண்டது.

சாந்தம் குடிகொள்ளும் சந்ததமும் உம்மிடமே
காந்தமாய் ஈர்க்கும் கனிவுமே சொந்தம்
எனக்கொண்டீர் எந்நாளும் எல்லோரும் ஏத்தும்
தனமாய்த் திகழ்ந்தீர் தினம்!

அம்மாவின் வீட்டிற்கு வருபவர் யாராயிருந்தாலும் அவர்கள் பசியுடன் வீடு திரும்புவதில்லை. அது எத்தனை மணியானாலும் இருப்பதைச் சுவையாக்கி உணவளிப்பார்;

ஊணிட்டீர் மற்றோர்க்கும் உற்றோர்க்கும் உள்ளன்பால்
காணில் எவர்க்கும் கவளமிட்டீர் - பேணியும்
கையால் பரிதவிப்போர்க் காங்குதவி யுந்தானிச்
சையால் நவின்றிட்டீர் நன்கு!

அம்மா கடிந்து கொள்வதிலும் ஒரு கனிவு இருக்கும்; கண்டிப்பிலும் ஒரு பாசம் ஒளிந்திருக்கும். அம்மாவின் தலைமயிர் என்றும் அழகுறச் சீவி முடியப் பட்டு இருக்கும். சேலை அணிவதில் ஒரு சுத்தமான நளினம் இருக்கும். தலை முடி எமக்குக் கலைந்திருந்தால் அன்பாகக் கடிந்து கொள்வார். அது போல் வாழ்விற்கும் பல அறிவுரைகளைத் தன்மையுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துச் சொல்வார். அவற்றைக் கேட்டு நடந்தவர் வாழ்வில் துன்பங்கள் தூர விலகிச் சென்றன.

கருணையின் நல்வடிவே கன்னல் மொழியால்
தருமும் அறிவுரைகள் தாங்கித்திருந்தி
தலையாய்க் கொளவே தரணியில் சேரெம்
மலையாய துன்பங்கள் போம்

எண்பதுகளில் யாழ் முழுவதும் விடுதலை வேட்கை நிறைந்திருந்தது; அம்மா தாய்மையின் சாதுரியத்தால் வாய்மை என்ற விடுதலையை அறுவடை செய்தார்; அன்று இருந்த பயங்கர சூழலிலும் தாய்மையின் கருணையால் துணிவுடன் செயற்பட்டுப் பலரின் துயர் தீர்த்தவர்; தாள மேளமில்லாமல் எத்தனையோ உயிர்களைக் காப்பாற்றியவர்; அத்தகைய வீர மனப் பாங்கு அன்றே கொண்ட பெண்மணி அவர்.

வாய்ப்பேச்சில் பெண்விடுத லைபேசா தேயந்தத்
தாய்மையின் சாதுரியம் தந்திட்டு வாய்மை
விடுதலை ஈந்தவும் வீரமும் பெண்ணென்
மிடுக்கதும் யாரிடமு மில்

தனது இல்லற வாழ்வின் பயனாய் ராஜன், ராணி, மோகன், யோகன் என நான்கு புத்திர செல்வங்களையும் அவர்களின் உயர்வையும் கண்டு மகிழந்தவர். யாழை விட்டு பெரிய பிரித்தானியா, ஜெர்மனி, சாம்பியா ஆகிய நாடுகளில் சிறப்புடன் சுற்றம் சூழப் பெருமை பெற வாழ்ந்தவர்.

இல்வாழ்வின் நல்லறம் ஆங்கியற்றி நான்காகு
நல்ல புதல்வோரின் நன்மையால் இல்லம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறக்க மகிழ்வாகச் சீமையிலுஞ் சுற்றம்
பிறக்கச் சுகித்திட்டீர் வாழ்வு

உம்முடைய குணாம்சங்களான கருணை, அன்பு, பாசம்
கொண்டு உமது வழியில் வாழும் வரத்தை எங்களுக்குத் தாரும்
அம்மா. அம்மா உங்கள் வாழ்வு கொண்டாடப்பட வேண்டிய
வாழ்வு என்பதில் எள்ளளவும் ஐயமில்லை..

வாழும் வழியே வரம்வேண் டுமும்போல
வாழுஞ் சிறப்பதால் வற்றாதே யாழும்
பெருகுதல் போல்நின் கருணை யுருவே
திருவுருவாய் கொள்வ தினிது

இன்றைக்கு இருப்பவர் நாளை இருப்பதில்லை என்று
அறிவோம்; ஆனால் அந்த இறப்பையும் சந்திக்கத் தயாராய்
இருந்த உங்களுடைய மனத் திடத்தை எங்களால் அறியவே
முடியவில்லை. அந்தத் திடம் இல்லாமலே உங்களை வழி
அனுப்பி வைக்கிறோம். அம்மா சென்று வாருங்கள். என்றும்
உங்கள் வழியில் தொடர்வோம் எம் வாழ்வை அன்பாகவும்
கருணையுடனும் மீண்டும் காணும் வரை !

இன்றிருப்பார் நாளையிலை என்றாலு மும்மரணம்
அன்று வரவே அடுக்கிட்ட துன்பமும்
தாங்கி இறப்பைத் தயவாக நாடிய
பாங்கும் அறிகிலம் யாம்
என்றும் உங்கள்

அன்பு மறவாத பெறாமகள்
புனிதா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நல்லன கேளீர்

அன்னை, பிதாவை, மதித்து நட
கண்கண்ட தெய்வம் அவர்களே
குருவைப் பின்பற்றிச் செயல்படு
உனது வழிகாட்டி அவரே
எறும்பு போல் சுறுசுறுப்பாயிரு
உனக்கு வேண்டியதைச் சேமித்து வை
தெய்வமொன்றுண்டு என்பதை நம்பு
நம்பிக்கை கொண்டு வழிபடு
எல்லாந் தெரியுமென்று நினையாதே
உனக்கு தெரியவேண்டியது சொல்லில் அடங்காது
பொருளையும் தேடு – அருளையும் தேடு
புண்ணியத்தைச் செய் - பாவத்தைச் செய்யாதே
சமயம் அறிந்து பேசு – சபையில் தெரிந்து பேசு
உன் வருத்தம் உனக்கே தெரியும்
நீ செய்த வினை உன்னையே சேரும்
உனக்காகவும் மற்றவர்களுக்காகவும் பிரார்த்தி
தெரிந்தவற்றைச் செய்து காட்டு
முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை
கவலையை மறக்க விநாயகர் கவசம் படி
வினையை வெல்ல விநாயகனைப் போற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

எமது குடும்ப விருட்சமாக விரிந்து படர்ந்து நிழல் தந்த எங்கள் அன்புத் தெய்வம் திருமதி தங்கபூபதி செல்லத்துரை அவர்களின் அமரத்துவத்தால் தாங்கொணாத் துயரத்தில் நாமிருந்த வேளைகளில் ஓடோடி வந்து எமது துயரத்தில் பங்கேற்று ஆறுதல் அளித்தோர், அனுதாபங்களை தெரிவித்து அளவற்ற அன்போடு அரவணைத்தோர், தொலைபேசி மூலமாக எங்களின் துயரோடு தங்களின் துயரையும் பகிர்ந்து கொண்டோர் அனைவருக்கும் நாம் நன்றி தெரிவிப்பதோடு அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், உற்ற நேரத்தில் உதவிகள் புரிந்தவர்களுக்கும், இம் மலரினை அழகுற வடிவமைத்து அச்சுப்பதிவு செய்த ஜே.ஆர். அச்சகத்தினருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

**என்றும் அன்புடன்**
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Designed & Printed @ JR Print**
**Tel: 020 8503 6643**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org